தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௭	திருவள்ளுவர் யாண்டு ௨௲௪ பிரமாதீச, ஆவணி (1973 — ஆகஸ்சுடு — செப்டம்பர்)	மலர் ௫

தமிழின் பொற்காலம்.

ம. வெ. சதாசிவன்,

இராணிப்பேட்டை.

'மனிதனின் நாகரிகம் மொழி; மொழியின் நாகரிகம் கவிதை' என்பர் நுண்மாண் நுழைபுல மிக்கார். ஒரு நாட்டின் நாகரிகத்தை அந்நாட்டு மக்கள் பேசும் மொழியினைக்கொண்டே தெரிந்து கொள்ளலாம். அன்று முதல் இன்று வரை, உலகில் சிறந்த இலக்கண இலக்கியங்களைக் கொண்ட மொழியினைப் பெற்ற நாடுகளே, நாகரிகத்தில் நனி சிறந்து, நாகரிகத்தின் முன்னேடிகளாய்ப் பெயரும் புகழும் அடைந்துள்ளன. உதாரணமாகப் பண்டைய உரோமாபுரி நாகரிகத்தின் தொட்டிலாய் விளங்கியதற்குக் காரணமே அந்நாட்டின் மொழியாகும் என்று வரலாற்றுப் பேரறிஞர்கள் கூறியுள்ளனர். அந்நாட்டின் நாகரிகத்தைப் பற்றி எண்ணி வியக்காத அறிஞர்களே இல்லை என்னுமளவிற்கு அதன் நாகரிகம் கொடிகட்டிப் பரவியுள்ளது.

"Oh thy Rome the name is borne to rule the earth" என்று பல சரித்திர ஆசிரியர்கள் வியந்து கூறுமளவிற்கு உரோமாபுரி, பல துறைகளிலும் தலை சிறந்து விளங்கக் காரணம் அந்நாட்டின மொழியே யாகும் என்பது வெள்ளிடை மலை.

மாபெரும் போர்வீரனும், மாமன்னனுமாகிய நெப்போலியன் ஒரு முறை, ''ஆயிரம் வாள் முனைகளைக் கூடச் சந்திக்க அஞ்சாத என் நெஞ்சம், ஒரே ஒரு பேனு முனையைச் சந்திக்க அஞ்சுகின்றது'' என்று சொன்னதாக வரலாறு கூறுகின்றது.

உருசியாவிலே தோன்றிய மாபெரும் மன்னர்களைவிட, அந் நாட்டின் இலக்கிய சாம்ராட்டாகிய டால்ஸ்டாய் அந்நாட்டின் மதிப்பை உலக அரங்கிலே உயர்த்தி விட்டார் என்பது யாவரும் மறுக்க முடியாத உண்மையாகும். இவற்றான் ஒரு மொழியின் வலிமையையும். அதன் பெருமையையும் நாம் அறிய முடிகிறது.

உலகப் புகழ் பெற்ற பாரசீகக் கவியான உமர்கயாம் "மாதவிக் கொடி நிழலில் மணிக்கவிதை நூலொன்றும், தீதறு செந்தேன் மதுவும், காதலி நீ பாட்டிசைத்துக் கூடுவையேல் ஈதன்றோ பரமபதம்" என்று பாடியுள்ளது இங்கு நினைவு கூறத்தக்கது.

பண்டைக் காலத்தில், தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டியர்கள். தமிழுக்கு — மொழிக்கு — முதலிடம் தந்துதான் ஆட்சி நடத்தி யிருக்கின்றார்கள். தமிழ்ப் புலவர்களும், அறிஞர்களும் அரசர்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்கள்.

இக்காலத்தில் தான் தமிழ் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. சேர, சோழ, பாண்டிய மன்னர்களில், பாண்டியர்கள் தமிழுக்கு மிகுந்த தொண்டாற்றி. கண்ணே போல் காத்து வளர்த்திருக்கிறார்கள். முதல், இடை, கடை எனும் முச் சங்கம் வைத்து இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் ஓம்பி வந்துள்ளனர் என்பதைத் தமிழ் கூறு நல்லுலகம் அறியும். ஐம்பெரும் காப்பியங்களும எட்டுத் தொகை, பத்துப் பாட்டு என்கிற பண்டைய தமிழ் இலக்கியங்களும் இக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன இவர்களைத் தவிர, குறுநில மன்னர் கள் கூட தமிழை உயிராக ஓம்பி வந்துள்ளனர் என்பதைக் கடையெழு வள்ளல்களின் வரலாற்றால் நம்மால் ஓரளவு உணர முடிகிறது. தமிழ்வாழத் தலைகொடுத்த இம்மன்னர்களின் காலங்கள். தமிழின் வரலாற்றில் இறவாப்புகழ் படைத்த இணை யற்ற காலங்களாகும்.

கால கட்டத்தில் பாரத நாடு ஆங்கிலேயர்களால் அடிமைப் படுத்தப் பட்டது. ஆங்கில ஆதிக்கத்தின் பலனாய்த் தமிழர்கள் நாட்டுரிமையை விட்டதுடன், மொழிப்பற்றையும் மொழி யுணர்ச்சியையும் மறந்து. ஆங்கிலத்தில் மோகம் கொண்டலையத் தலைப் பட்டனர். ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்ட இந்த 150 ஆண்டுகள் (ஏறக் குறைய) தமிழர்கள் வரலாற்றிலேயே மிகவும மோசமானதாகும். இந்த இடைக் காலத்தில் தான்,

தமிழ் நாட்டுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நீதி மன்றங்களிலும், அரசாங்க அலுவலகத்திலும் ஆங்கிலம் தமிழுக்குச் சேரவேண்டிய இடத்தை, அதிகாரத்தின் பலத்தாலும் ஆதிக்கத்தின் பெயராலும் பிடித்துக் கொண்டது. மக்களும் ஆங்கிலத்தில் பேசுவது மிகவும் நாகரிகமானது என்று நினைக்கத் தலைப் பட்டனர்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டி, இந்தியாவிற்கு சுதந்தரம் பெறக் காங்கிரசுக் கட்சி ஏற்படுத்தப்பட்டதும், அக் காங்கிரசில், இந்தி பேசுவோரின் செல்வாக்கு ஓங்க ஆரம்பித்தது. இந்தியா சுதந்திரம் அடைந்ததும், இந்தியாவின் பொது மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்கிற கருத்து இந்தியாவின் அரசியல் சாசனத்தில் இடம் பெற்றுவிட்டது. இதையெல்லாம், தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். ஆனால் அதில் ஒரு சிறு பிரிவினர் மட்டும். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க் குரல் எழுப்பினர்கள். தமிழ்த் தென்றல் திரு. வி. க அவர்களும், தமிழ்ச் சிங்கம் பசுமலை சோமசுந்தர பாரதி அவர்களும் இவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் இவர்களுடன் அரசியல் கலப்பற்ற தமிழ்க் கடல் மறைமலை அடிகளும், மற்ற தமிழ் அறிஞர்களும் தமிழுரிமை கோரி ஓரணியில் திரண்டனர். இவர்களைத் தவிர தமிழர்களின் பெரும நலனைக் கருத்தில கொண்டு அரசியல் துறையில் நீதிக் சட்சியினர் போராடத் தொடங்கினர். அவர்களில் முக்கியமானவர்களாக, பெரியார், பன்னீர்ச்செல்வம், பி. டி ராசன், அறிஞர் அண்ணா முதலியவர்களைக் கூறலாம்.

இக்கால கட்டத்தைத் தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என்று கூறத்தக்க வகையில் தமிழில் மக்களுக்குப் புதுப்பற்றும் பாசமும் ஏற்படத் தலைப்பட்டது. புதுமைப் பித்தன் என்னும் புதுமை எழுத்தாளர் தமிழின் வசன நடைக்கு. குறிப்பாக சிறுகதை உலகிற்கு, அரும்பெரும் தொண்டாற்றினர். தமிழில் நாவல்களும், சிறுகதைகளும், புதிய புதிய கவிதைகளும் ஏராளமாக இக்கால கட்டத்தில் தான் தோன்றின.

இவ்வளவு இருந்தும், அரசினரின் ஆதரவைப் பெருத காரணத்தால், தமிழ் ஒரு இரண்டாந்தர மொழியாகவே இருந்து வந்தது. அண்ணாவின் தலைமையில் இயங்கிய தி. மு. கழகத்தினர், தேன் தமிழை, தமிழக அரசியல் மேடைகளில்,

தங்கள் தென்றல் நடையால் புதியதொரு பொலிவோடு தவழ விட்டார்கள். குறிப்பாக அறிஞர் அண்ணாவின், தங்கு தடையற்ற அடுக்குச் சொற்றொடர்கள் தமிழகத்து இளைஞர்களின் இதய பீடத்தைப் பற்றிக் கொண்டது,

புதுவைக் குயில், புதுமைக் கவி, புரட்சிக் கவிஞர், பாவேந்தர் பாரதிதாசன், வீணையும், வீரனுக்கும் அருமையான தமிழ்க் கவிதைகளை ஏராளமாக இயற்றிய காலமும் இதுவே யாகும் அவரின் பேச்சிலும், மூச்சிலும் தமிழே இருந்தது. 'தமிழ் இயக்கம்' எனும் அவரது கவிதை நூலிலே கவிஞர், 'கல்லூரித் தலைவரையும், வணிகப் பெருமக்களையும், அறிவிப்புப்' பலகைகளில் ஏன் தமிழில்லை என மிகவும் கோபமாக வினவுகிறார். பின்னர் தமிழகத்துத் தமிழ்த் தெருவில் தமிழ் தானில்லை என்ற உண்மையை ஏக்கப் பெரு மூச்சுடன் கூறுகிறார் கவிஞர். மற்றொரு கவிதையில் தமிழ் தழுவாச் சுவடிகளை தணல் தழுவா திராதினிமேல் என்று கோபத்துடன் எச்சரித்துவிட்டு 'கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே' என்று மக்களைக் கண்டு கூறுகிறார். என்னே தமிழ்ப் பற்று!

தமிழகத்து மாணவர்கள், 1965-ஆம் ஆண்டு இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடத் தொடங்கினார்கள். மொழி காக்க உலகில் வேறெங்கும் இப்படி ஒரு போராட்டம் நடந்ததில்லை எனும் விதத்தில் மாணவர்கள் தமிழ் காக்க கொதித்தெழுந்தார்கள். அதன் பயனாய், தலை கொடுத்துத் தமிழ் காக்கும் வீரர் கூட்டம்; உயிர் கொடுத்துத் தமிழ் காத்த வீரம் கண்டோம்.

தமிழ் நாட்டில் 67-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு தி. மு. கழகம், அரசைக் கைப்பற்றியது. அறிஞர் அண்ணாவின தலைமையிலே அமைந்த அவ்வரசு முதல் வேலையாகச் சென்னை மாநிலத்திற்கு. 'தமிழ் நாடு' என்ற பெயரைச் சூட்டியது. தமிழைக் கல்லூரிகளில் பாட மொழியாக்கியது அவ்வரசு. தமிழைப் பாட மொழியாக எடுத்துப் பயிலும் மாணவர்களுக்குப் பல வித சலுகைகள் தமிழக அரசால் அளிக்கப்பட்டு வருகின்றன. தமிழ் அரசாங்க மொழியாக ஆக்கப்பட்டதோடு. தமிழாசிரியர்களின் நிலையும் உயர்த்தப்பட்டது இந்தி அடியோடு விரட்டப்பட்டது. சென்னையில் தமிழ் அறிஞர்களுக்குச் சிலைகள்

(134 பக்கத்தில் பார்க்க)

மனிதன் தோற்றக் காலமும் இலெமூரியாக் கண்டமும்.

செ. இராமநாதன், M.Sc., F.M.S.
மே. கி இலக்குமி நாராயணன், M. Sc., F. M. S.,
ஆய்வாளர்கள், நிலவியல் துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.

இந்நூற்றுண்டில் மனிதன் தோற்றம் பற்றிப் பல ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் வெளி வந்துள்ள போதிலும், இன்னும் இது குறித்து ஒரு காலவரையறையை நிச்சயமாகக் குறிப்பிட முடியவில்லை. பொதுவாக மனிதத் தோற்றம் பற்றிப் பேசப்படுவதோடு தமிழ் இனத் தோற்றம் பற்றியும், எங்கு வாழ்ந்தனர் என்பது பற்றியும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல்களில். தமிழ் மக்கள் பல இடங்களில் பரவி வாழ்ந்தமைக்கான காரணங்களைக் கூறும்போது. நிலம் பல பகுதிகளாக உடைபட்டுப் பிரிந்தபோது குடிபெயர்ந்தனர் என்ற ஒரு காரணத்தையும் சான்ருகக் கூறுவர். தமிழ் மக்கள் என்றில்லாமல், பொதுவாகவே மக்கள் தோற்றம் என்றும். நிலம் பல பகுதிகளாகப் பிரிந்தபோது இருந்த நிலை, காலம் குறித்தும் இங்கு ஆராய்வோம்.

இலெமூரியாக் கண்டம் இருந்ததைப் பற்றியோ அல்லது தமிழ் மக்கள் அங்கு வாழ்ந்ததைப் பற்றியோ ஐயப்பாடு இல்லை. ஆனல் இலெமூரியாக் கண்டம் பற்றிக் குறிப்பிடப்படும் காலம் பற்றியே இக்கட்டுரை விவரிக்கின்றது

முதற்கண் நிலம் பல பகுதிகளாக உடைபட்டு ஓரளவிற்குச் சீர்நிலை பெற்ற காலம் குறித்துக் காண்போம்.

நிலவியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி நிலமானது பல வேறு பகுதிகளாக உடைபட்ட (Continental drift) காலம் 'சுராசிக்' (Jurassic) எனக் கூறப்படும் காலமாகும் பல ஆராய்ச்சி முடிவுகளின்படி இந்தக் காலம் 135—181 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் குறிப்பிடுகின்றனர். இக் காலத்தில், நிலத்தில் தெராப்சிடா (Therapsida) என்னும் பாலூட்டிகள் போன்றவையும், நீர் நிலைகளில் வாழ்ந்த லிங்குலாய்டு (Liuguloid), பெலிசிபாட் (Pelecypod) ஆய்ஸ்டர் (Oyster) ஐனோசெராமஸ் (Inoceramus) உயிரினங்களும் இருந்தனவாகக் கருதப்படுகின்றது. இதற்கான சான்றுகளும் தொல்லுயிர் எச்சங்களும் (Fossils) கிடைத்துள்ளன.

நிலத்தில் சீரான வெட்ப, தட்ப நிலை நிலவிய போது உயிரினங்கள் தோன்றுவதற்கும், வளர்வதற்கும் ஏற்ற சூழ்நிலை தோன்றியது முதலில் தோன்றிய ஒரு செல் (Single Cell) உடைய அமீபா (Ameba) ஏறக்குறைய 600 மில்லியன் ஆண்டு களுக்கு முன்னர்த் தோன்றியது. பின்னர் ஏற்பட்ட சூழ்நிலை களுக்கு ஏற்பவும் வாழவேண்டிய இடத்தின் அமைப்பைப் பொருத்தும். கூர்தலற வளர்ச்சி பெற்றுப் பல மாற்றங்கள் மேற்கூறிய பிராணி வழி வம்சத்தில் ஏற்பட்டன. கேம்பிரியன் (Cambrian) என்று கூறப்படும் காலத்தில் (500—600 மில்லியன் ஆண்டுகள் முன்னர்) முதுகெலும்பற்ற நன்கு வளர்ச்சி யடைந்த உயிரினமாகிய 'டிரைலோபைட்டா (Trilobite) நீர் நிலைகளில் தோன்றின என்பதைத் தொல்லுயிர் எச்சங்கள் வாயிலாக அறிகின்றோம் அக்காலத்தில் இருந்து பிளிஸ்டோசின் (Pleistocene) என்னும் காலம் வரை, பல மாறுதல் கள் ஏற்பட்டுப் பிராணிகளில் பல் வகையினங்கள் தோன்றின. [ஊழி, காலவட்டம், காலநீட்சி முதலியவை அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன] இப் பல்வகை இனங்கள் அன்று நில

(132 பக்கம் தொடர்ச்சி)

வைக்கப்பட்டன. அரசாங்க அலுவலகங்கள், உடைமைகள் முத லியவற்றில் தமிழில் அறிவிப்புப் பலகைகள் எழுதப்பட்டன. மொத்தத்தில், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று தமிழக அரசால் ஆக்கப்பட்டன. தமிழகப் போக்குவரத்தை அரசுடை மையாக்கிய தமிழக அரசினர், பாண்டியன் போக்குவரத்து, பல்லவா போக்குவரத்து. சோழன் போக்குவரத்து என்ற பெயர்களை வைத்துள்ளனர். பண்டைய தமிழக வரலாறு. நம்கண் முன் பளிச்சிடும் முறையில், இவ்வரசு நடத்திவரும் காரியங்கள், தமிழ் கூறு நல்லுலகத்தினரால பெரிதும் பாராட்டப்படுகின்றன

தமிழகத்துக் கோயில்களில், தமிழ் அருச்சனைகள் இவ்வர சால் மக்களின் ஏகோபித்த பாராட்டுடன் தொடங்கப் பெற்று எல்லாக் கோயில்களிலும் பரவி வருகின்ற அருமையை என்னென்பது!

ஓல்லும் வகையெல்லாம், தமிழக அரசு, தமிழ் மொழிக்கு. ஊக்கமும், ஆக்கமும் தருவதைக் கண்ணுறும்போது இக்காலத் தைச் சந்தேகமின்றி, உறுதியாகத் 'தமிழன் பொற்காலம்' என்று அறுதியிட்டுக் கூறலாம் தான்!

விய சூழ்நிலைக்கு ஏற்றவாறு சில நிலத்தில் வாழ்பவையாகவும் மாறின நிலத்தில் வாழ்ந்த உயிரினங்களைக் காட்டிலும் நீரில் வாழ்ந்தவை அதிகக் கூர்தலற வளர்ச்சி பெற்றுப் பல்வேறு நிலைக் கேற்பத் தோன்றின. பிளிஸ்டோசின் காலத்தில் இறுதியாக மனித இனம் தோன்றியது.

ஆகவே, ஆராய்ச்சியாளர்களின் முடிவுகள்படி சுராசிக் என்று குறிப்பிடப்படும் காலத்தில் பாலூட்டிகளை ஒத்த உயிரினங்களே வாழ்ந்தன என்பதை அறுதியிட்டுக் கூறலாம் தவிர, இந்தக் காலத்தில் தான் நிலம் பலபகுதிகளாகப் பிரிவுபட்டு மாற்றுத் தோற்றத்தை அடைந்தது (Wegner) என்பதை மேற்கூறிய ஒருப்பட்ட உயிரினங்களின், பிளவுபட்ட பல இடங்களிலும் கிடைக்கும். தொல்லுயிரெச்சங்களின் மூலமாக நிரூபணம் செய்கின்றனர் ஆய்வாளர்கள்.

உயிர் வாழ்க்கைக்கும், மனித வாழ்க்கைக்கும் முதல் பிறப்பிடம் இலெமூரியாக் கண்டம் என்று பல நூல்களில் குறிப்பிடப்படுகின்றது. தவிரவும் மனித இனம் தவழ்ந்து வளர்ந்த தொட்டில் இலெமூரியாக் கண்டம் என்றும், இதற்கும் முன்னர் மனித இனம் இருந்ததென்றும் பல ஆசிரியர்கள் கூறுகின்றனர். இலெமூரியாக் கண்டம் கடல் கொள்ளப்பட்டபோது அதன் மக்கள் ஆசிய, ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளுக்குக் குடியேறினர் என்றும், அங்கு இவர்கள் ஆட்சியும் நாகரிகமும் மேலோங்கியிருந்தன என்றும் கூறப்படுகின்றன.

இது தவிர இலெமூரியாக் கண்டம் கடலுக்குள் புகவும், இந்தியாவையும் சீனாவையும் பிரித்திருந்த கடலகம் நிலமாக மாறிவிட்டதாகவும், இதன் பின்னரே மங்கோலிய இனம் இந்தியாவிற்குள் புகுந்தன என்றும் கூறுகின்றனர்.

இந்தியாவையும், சீனாவையும் பிரித்த கடல் 'டெத்திஸ்' (Tethys) என்று குறிப்பிடப் படுகின்றது. இக்கடல் மறைந்து, அஃதாவது பின் சென்று, அங்கு நிலம் தோன்றிய காலம் கிரிடேசியஸ் (Cretaceous) என்று கூறப்படுகின்றது. இக்காலம், மனித இனம் தோன்றிய காலமான பிளிஸ்டோசின் காலத்திற்கு ஏறக்குறைய 63 — 135 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாகும். இந்தக் காலத்தில் பாலூட்டிகள் (Mammals) வாழ்ந்தமைக்கான சான்றுகள் தொல்லுயிரெச்சங்கள் மூலமாக அறியப்படுகின்றன

மனித இனம் என்பது டெர்சியரி (Tertiary) இறுதிக் காலத்தில் — பிளிஸ்டோசின் ஆரம்ப காலத்தில், அதாவது O-1 முதல் 1 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்த்தான் முதன் முதலில் தோன்றியது என்பதைச் சான்றுகள் மூலம் உறுதிப் படுத்தியுள்ளனர். மனித இனம் தோன்றுவதற்கு முன்னர் இருந்த பல நிலைகளைத் தெளிவாகக் கீழ்க்கண்டவாறு குறிப் பிடுகின்றனர்.

திவோனியன் — முதுகெலும்புள்ள மீன்கள்

திவோனியன் இறுதி — முதலை போன்ற காட்டிலோசாரஸ் (Cotylosaurs)

தடிரையாசிக் — பிலிகோசாரியா — ஊர்வனவகை

சுராசிக் — தெராப்சிடா — பாலூட்டிகளை ஒத்தவை

கிரிடேசியஸ் — பாலூட்டிகள் (Mammals)

டெர்சியரி — மார்சுபியஸ் ஈதிரியா

பிரைமேட்ஸ் (Primates)

இலெமூர், குரங்கு, மனிதக் குரங்கு தார்சிஸ்

பிளிஸ்டோசின் — ……… கிப்பன்ஸ், சிம்பன்சி கொரிலா மனித இனம்

ஆகவே, மனித இனம் என்பது கூர்தலற வளர்ச்சியால், பல உயிரினங்களிலிருந்து பல மாறுதல்கள் அடைந்து இறுதியில் பிளைஸ்டோசின் என்று குறிப்பிடப்படும் காலத்தில் இன்று காணப்படும் மனிதர்கள் போலன்றிச் சில பல மாற்றங்களு டன் தோன்றியது. சுராசிக் என்னும் காலம், மேற் கூறப்பட்ட பிளைஸ்டோசின் காலத்திற்கு 135 — 181 மில்லியன் ஆண்டு களுக்கு முற்பட்டதாகும், ஆகவே இந்தக் காலத்தில்.

(பிளிஸ்டோசின்) இலெமூரியாக் கண்டம் என்ற ஒன்று இருந்தது என்பதுபற்றி ஐயம் எழுகின்றது. தவிரவும். அதிலிருந்து மக்கள் மற்ற நிலப் பகுதிகளுக்குக் குடியேறினர் என்பது முற்றிலும் தவறானதாகும்.

பல ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றபடி இலெமூரியாக் கண்டம் என்ற ஒன்று இருந்திருக்கக் கூடும். அந்நிலத்தில் மனித இனமும் வாழ்ந்திருக்கக் கூடும். ஆனால் காலம் வேறுபட்டது. தனுஷ்கோடிப் பகுதி மிகச் சமீபத்தில் கடலுட் புகுந்தது நாம் அறிந்ததொன்றே. இது போன்றே, ஒரு நிலப்பகுதி மேற் கூறிய பெயருடன் பிளேஸ்டோசின் காலத்திற்குப் பின் இருந்திருக்கக் கூடும். காலப்போக்கில் கடல் கொந்தளிப்பின் காரணமாக இந்நிலப் பகுதியைக் கடல் கொண்டிருக்கலாம். அச்சமயம் அங்கிருந்த மக்கள் பல இடங்களுக்கும் குடிபெயர்ந்து போயிருக்கவும் கூடும். ஆனால் நிலத்தில் இம் மாற்றங்களும், மனித இனம் குடி பெயர்ந்ததும், நில மாற்றம் அடைந்த காலத்தில் தான் என்று குறிப்பிடுவது தவறான தொன்றாகும். இலெமூரியாக் கண்டம் அழிவுற்றது மனித இனம் தோன்றிய பின்னர்த் தான் என்பதை உறுதி செய்வோமாயின் அதற்கும், நிலம் பல பிரிவுகளாகப் பிரிவுபட்ட காலத்திற்கும் (சுராசிக்) யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதை அறுதியிட்டுக் கூறலாம். ஆகவே மனித இனம் வாழ்ந்த இலெமூரியா கடலால் கொள்ளப்பட்டது என்று கூற வேண்டுமாயின் அந்நிலை பிளேஸ்டோசின் என்னும் காலத்திலேயோ அல்லது அதற்குப் பிற்பட்டோ ஏற்பட்டிருக்க வேண்டும். நிலவியல் ஆராய்ச்சிகளின் படி இந்தக் காலத்தில் (முழு) நிலம் பல பகுதிகளாகப் பிரியவில்லை. பிரிந்திருந்த நிலத்தில் சிறு, சிறு மாற்றங்களே ஏற்பட்டனவேயன்றிப் பெரும் மாற்றம் ஒன்றும் எற்படவில்லை என்பது நிலவியல் ஆய்வாளர்களின் கருத்து.

(138 ஆம் பக்கம் தொடர்ச்சி)

References :

1. Krishnan. M. S. (1968) Geology of India and Burma Higginbothams (P) Ltd.
2. Kummel Earth History. Mc Graw Hill
3. Stokes, W. L. (1965) Essentials of earth history Prentice - Hall, India.
4. Wegener, A (1925) Origin of continents and oceans GIZ.

நிலவியல் கால அட்டவணை

ஊழி (Era)	கால வட்டம் (Period)	ஊழி மூல முதற்காலம் (Epoch)	மில்லியன் ஆண்டுகளுக்கு முன் (ஏறத்தாழ)	கால நீட்சி மில்லியன் ஆண்டுகளில்
		அண்மைக் காலம் பிளிஸ்டோசின்	0 — 1	1
	குவார்ட்டனரி	பிளையோசின்	1 — 13	13
செனசோயிக்		மையோசின்	13 — 25	12
	டெர்சியரி	ஆலிகோசின்	25 — 36	11
		இயோசின்	36 — 58	22
		பேலியோசின்	58 — 63	5
	கிரிடேசியஸ்		63 — 135	72
மீசோசோயிக்	சுராசிக்		135 — 181	46
	திரையாசிக்		181 — 230	49
	பெர்மியன்			
	கார்பானிபரஸ்		230 — 280	50
பேலியோசோயிக்	டிவோனியன்		280 — 345	65
	சைலூரியன்		345 — 405	60
	ஆர்டோவிசியன்		405 — 425	20
	கேம்பிரியன்		425 — 500	75
பிரி கேம்பிரியன்	இறுதி		500 — 600	100
	தொடக்கம்		2700 — 3300	

அழகின் சிரிப்பில் கவிதைத் தத்துவம்

துரை. சீனிசாமி,
ஆராய்ச்சி மாணவர்,
தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை

"படைப்பாற்றல் குவியப்பெற்றிருக்கும் மனிதனே கவிஞன். அவ்வாற்றல் அவனையும், அதை அவனும் ஆளுஞ்சக்தி பெற்றவர். இவ்வாற்றலும் ஏதோ ஒரு காரண வழியில் சமுதாய நோக்கோடே திகழும்" (1) என ஸ்டெட் என்பவர் கூறுகின்றார். படைப்பாற்றல் கவிஞனைத் தழுவும் தன்மையும், அவன் வாழுகின்ற சமுதாயமுமே அவனுடைய கலைத் தத்துவத்தின் அடிப்படைகள்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைத் தத்துவம் அவருடைய 'அழகின் சிரிப்பு' என்ற நூலில் காணக்கிடக்கும் பாங்கு அல்லது 'அழகின் சிரிப்பு' தரும் கவிதைத் தத்துவம் பற்றிய கலைவடிவ அடிப்படை பற்றிய ஆய்வே இக்கட்டுரை.

படைப்பாற்றல்.

கவிதைக்கும் தனக்கும் இடையிலான தொடர்பு பற்றி பாரதிதாசன் நூல் போக்கினூடே பல இடங்களில் கூறிச் செல்கிறார். கொள்கைகளாகக் (Theories) கூறிச் செல்லாமல் உள்ளெழுச்சி (Inspiration) வசத்தால் உதிர்த்துச் செல்கிறார். முதலாவதாக 'அழகென்பாள் கவிதைதந்தாள்' (2) எனக் கூறுகின்றார். இவ்வழகு என்றால் என்ன என்பதற்கு விளக்கமாக மூன்று பாடல்களுக்குப் பின் பதினைந்து பொருட்களில் அழகு பற்றிய ஓவியங்கள் தீட்டுகிறார். அழகில் தொடங்கிச் சிற்றூர், பட்டணம், தமிழ் என முடித்துள்ளார்.

இவற்றினுள் கவிதை உள்ளெழுச்சி (Poetic Inspiration) பற்றி அவர் கூறியிருப்பனவற்றை—அதாவது நேரடி நெகிழ்ச்சி

---

1. C. E Stead, 'The New Poetic, (Introduction) 'Hutehinson University Library, London. 1964.
2. அழகு, பாடல் — 1, 'அழகின் சிரிப்பு — நூல்

* 1971, சூனில், அண்ணாமலை நகரில் நடைபெற்ற, இந்தியத் தமிழாசிரியர் கருத்தரங்கில் படிக்கப் பெற்றது.

நிலைகளைக் காட்டும் குறிப்புக்களை முதலில் காணலாம் ஏனெனில் மனத்தின் அசைவுகள் மிக மிக அடிப்படையானவை.

1. காண இரு விழிச்சிறகால் நெஞ்சம் எழுந்திடும் (3)

2. கடல் நீரும் நீலவானும்
கைகோக்கும் அதற்கிதற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்
எழில்வீணை. அவ்வீணைமேல்
அடிக்கின்ற காற்றோ வீணை
நரம்பினை அசைத்தின்பத்தை
வடிக்கின்ற புலவன் (4)

3. தமிழ்எனக் ககத்தும், தக்க
தென்றல் நீ புறத்தும் இன்பம்
அமைவுறச் செய்வதை (5)

4. நாடினேன் நடந்தேன்
மாடிவீ டொன்றுமில்லை
மரங்களோ பேசவில்லை (6)

5. ஏலுமட்டுந் தோழா நீ
எடுத்துண்பாய் எழிலையெல்லாம் (7)

6. பிணிபோக்கி என் விழிக்குப்
படைத்தது பெருவிருந்தே (8)

7. செந்தா
மரைமலர்க்காடு, நெஞ்சைக்
கண்ணுளே வைக்கச் சொல்லிக்
கவிதையைக் காணச் சொல்லும் (9)

8. என்னைநான் இழந்தேன். இன்ப
உலகத்தில் வாழலுற்றேன்
....
இன்றெல்லாம் பார்த்திட்டாலும்
தெவிட்டாத எழிலின் கூத்தே. (10)

இம்மேற்கோள்களிலிருந்து. 'நெஞ்சைக் கண்ணுள்ளே வைக்கச் சொல்லி கவிதையைக் காணச் சொல்லும்' ஆற்றலே

---

3. கடல் — பா. 4.
4. கடல் — பா. 8
5. தென்றல் — பா. 9
6. காடு — பா. 1
7. குன்றம் — பா. 9
8. செந்தாமரை — பா. 3
9. ,, — பா. 5
10. ,, — பா. 10

அவரை இயக்கிய ஆற்றலென்றும் அவ்வாற்றலால் பெற்ற கூர்ந்தநோக்கே (Observation) உணர்ச்சிக் கலப்புடன் கண்ணுள் நெஞ்சைவைத்த அவருடைய கலை வடிவங்களின் பிறப்பிற்கு அடிப்படையாகிறது எனலாம். அவரைத் தூண்டிய ஆற்றலையும். அது கவிதையாதற்குரிய எழுச்சி நிலைகளையும் 'அழகு' பற்றிய பாடல்கள் நன்கு புலப்படுத்தும். இயற்கைக் காட்சிகள், குழந்தைவிழி, பூத்தொடுக்கும் விரல், திருவிளக்கு, உழைப்பாளன் வாழ்வு. ஆகியவற்றில் அவர் அழகைக் காண்கிறார் இவ்வுள்ளத்தெழுச்சியே (Inspiration) அவருடைய நோக்குந் திறனை வளர்த்து 15 பொருட்களைப் பற்றிய கற்பனை நயமிகுந்த பாடல்கள் புனைய அடிப்படைக் காரணம் எனலாம்.

கூர்ந்த நோக்கு

பாரதிதாசனின் கவிதைத் தத்துவத்தில் கூர்ந்த நோக்கு மிக இன்றிமையாதது 'அழகு' பற்றிய பாடல்கள், பிற பாடல்கள் யாவற்றினூடேயும் "கண்டேன் கண்டேன்" எனும் குரலைப் பரக்கக் காணலாம். மேலும்

அடுக்கிதழ்த் தாமரைப்பூ
இதழ்தொறும் அடிப்புறத்தில்

படுத்திருப்பாய் நீ..... (11) என இருளைப் புலப்படுத்தும் கவிஞர் திறம் இவருடைய கூர்ந்த நோக்கிற்கு நல்ல சான்று. முன்னர் காட்டிய மேற்கோள்களில் "கடல்நீரும் வானும் கைகோக்கும்" என்ற பாடலை உள்ளாய்ந்து பார்த்தால் அவர் இயற்கையோடு ஒன்றி நோக்கி நிற்கும் தன்மையை அறியலாம். வானும் கடலும் பிணைந்த காட்சி இடையில் வெள்ளத்தில் எழுச்சி, காற்றின் ஓசைகள். இக்காற்றே வீணை மீட்டும் புலவனாக மாறுகிறது. இப்பாடல் பாரதிதாசனின் ஒன்றி நோக்கும் தன்மைக்கு நல்ல எடுத்துக் காட்டு. மேலும் சில சான்றுகள்.

"கண்ணாடித் தரையின் மீது
கண்கவர் பச்சைத் தட்டில்
எண்ணாத ஒளிமுத்துக்கள்
இறைந்ததுபோல் குளத்துத்
தண்ணீரிலே படர்ந்த
தாமரை யிலையும் மேலே
தெண்ணீரின் துளியும் கண்டேன்

11. இருள். பா. 7.

உவப்போடு வீடு சேர்ந்தேன்.
சிலநாட்கள் சென்ற பின்னர்க்
குளக்கரை சென்றேன் பச்சை
இலைத்தட்டில் சிந்தும் பால்போல்
எழில்நீரும் கரிய பாம்பின்
தலைகள்போல் நிமிர்ந்திருந்த
தாமரைச் சிற்றரும்பும்
இலகுதல் காணப் பெற்றேன்
காட்சியின் இன்பம் பெற்றேன்'' (12)

எனச் செந்தாமரையைப் பற்றிக் கூறும் பொழுது, அமைதியாக இயற்கை உலகை அவர் உற்று நோக்குந் திறத்தை நாம் அறிந்து கொள்ளலாம். இக்கூர்ந்த நோக்கே கவிதைக்கு முக்கிய அடிப்படை என ஆங்கிலக் கவிஞன் வோர்ட்ஸ்வொர்த் நம்பினர் ''கூர்ந்த நோக்குத்திறன் உணர்ச்சிக் கலப்புடன் பிணைந்த நிலையே படைப்பாற்றலின் வெளியீட்டு நிலை என்பர் வோர்ட்ஸ்வொர்த்'' என அவர் கவிதைத் தத்துவத்தை ஆராய்ந்த எள்பர்மென் என்பவர் கூறுகிறார். (12—அ) பாரதிதாசனும்

''காட்சியின் இன்பம் பெற்றேன்'' (13)

''எங்கணும் உணர்ச்சி வெள்ளம்'' (14)

''நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்'' (15)

என்றெல்லாம் தம்முடைய உணர்ச்சி நிலைமையையும் காட்டியுள்ளார்.

இவ்வாறு நோக்கி உணர்ச்சிக் கலப்புறும் கவிஞர் கற்பனைகளை இந்த நிலைக்குப் பின்னரே வளர்த்துக் கொண்டுள்ளார் எனலாம்,

''கீரியின் உடல் வண்ணம்போல்
மணல்மெத்தை, அம்மெத்தைமேல்
நேரிடும் அலையோ கல்வி

---

12. செந்தாமரை—பா. 1 & 2
12. அ. James A. W. Hefferman, '' Wordsworth's Theory of Poetry,'' P. 29. Newyork, 969.
13 செந்தாமரை—பா. 2.
14. ஞாயிறு — பா. 2
15. அழகு — பா. 2

நிலையத்தின் இளைஞர்போலப்
பூரிப்பால் ஏறும், வீழும்
புரண்டிடும் பாராய் தம்பி" (16)

"அருவிகள் வயிரத்தொங்கல்
அடர்கொடி, பச்சைப்பட்டே
குருவிகள் தங்கக்கட்டி
குளிர்மலர் மணியின்குப்பை" (17)

போன்ற வெற்றிகரமான உவமைகளுடன் தம் கற்பனைத் திறத்தைப் புலப்படுத்திச் செல்வார்.

"உயிருள்ள அழகின் மேய்ச்சல்" (18)

"திக்கெலாம் தெரியக்காட்டும்
இளங்கதிர்ச் செம்பழத்தை" (19)

என்பனபோன்ற சொற்பெய்வுத்திறனும் அமையக் காணலாம்..

அணுகுந்தன்மை — இயற்கை

இவ்வாறும் தொடங்கி நிகழும் கவிஞரின் கலைத்திறத்தை — கவிதைப் போக்கை வளர்ப்பன அல்லது பிறரிலிருந்து மாற்றுவன. அவருடைய அணுகுந் தன்மைகளே எனலாம். இயற்கை உலகையும் வாழ்க்கையையும் அணுகுந்திறனே எனலாம். இத்தன்மைகள் 'அழகின் சிரிப்பில்' நன்கு காணக்கிடக்கின்றன.

இயற்கையை நடப்பியல் போடும் (Realistic; அணுகுகின்றார். செயற்கையாகவும் அணுகுகின்றார். காடு பற்றிய கவிதையில்

'கன்றோ
மானைக் காணாது நிற்கும்
அதை ஒரு நரிபோய் மாய்க்கும்' (20)

எனக் காட்டின் கொடுமையைப் பாடுவார். புறாக்களை வியந்து விட்டு இறுதியாக,

---

16. கடல் — பா. 1
17. குன்றம் — பா. 2
18. புறாக்கள் — பா. 2
19. கடல் — பா. 6
20. காடு — பா. 8

கூட்டினை வேலன் வந்து
சாத்தினன். குழைத்துவண்ணம்
தீட்டிய ஓவியத்தைத்
திரையிட்டு மறைத்தல் போல (21)

என்பார். ஆனல் கிளிபற்றிய பாடலில் இவ்வுணர்ச்சியைக் காணமுடியாது எங்கும் அழகு எதிலும் அழகு என்றே பாடுவார். புருக்களிடமிருந்து மனிதர் கற்றுக் கொள்ளவேண்டுமென்று கூறிவரும்போது புருக்களிடமும் தவறான ஒழுக்கத்தைக் காணும் கவிஞர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து, மனிதரிடமிருந்து அவை கற்றுக்கொண்டன என வலிந்த நவிற்சி (Interpretation) முறையில் சொல்லுகிறார்.

காரணம் எங்கும் எதிலும் அழகு என்ற அடிப்படையில் செல்லும்போது உள்ளறிதலில் (Insight) இத்தகைய முரண்பாடுகள் தோன்றுகின்றன.

திசைகண்டேன் வான்கண்டேன் உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன்யாண்டும்
அசைவனவும் நின்றனவும் கண்டேன், மற்றும்
அழகுதனைக் கண்டேன் நல்லின்பங்கண்டேன் (22)

என்ற உணர்ச்சிப் பெருக்கத்தில் எழுதுகிறார் கவிஞர்.

"பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள்காண்
பழமையினால் சாகாத இளையவள்காண்
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்
நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை" (23)

"என்னைநான் இழந்தேன் இன்ப
உலகத்தில் வாழலுற்றேன்" (24)

என்ற குறிப்புக்கள், இயற்கையிடம் எங்கும் அழகு எதிலும் அழகு என்ற வேகத் தன்மையில் புகுந்து நோக்கும் தன்மையை நன்கு காட்டும். வெறும் வேகத் தன்மை மட்டுமல்ல, வேற்றுமையில் உள் ஒருமை அழகு காணும் தன்மையையும் காண

---

21. புருக்கள் — பா. 10 23. அழகு — பா. 3
22. அழகு — பா. 3 24. செந்தாமரை — பா. 10

லாம் இருள், காடு, புறாக்கள், கிளி, ஆகிய பாடல்களில் இத்தன்மையைக் காணலாம் கவிஞனுக்குரிய இவ்வாற்றல் பாரதிதாசனிடம் நிறைந்திருப்பது போல சில உள்ளறிதல் முரண்பாடுகளும் காணப்படுகின்றன. அழகுத் தத்துவம் இவ்வாறு பாரதிதாசனின் கவிதைத் தத்துவத்தின் முக்கிய பகுதியாகத் திகழ்கிறது. நோக்கி உணர்ந்து, கற்பனையுடன் அமையும் இன்னழகுணர்ச்சி இயற்கையாவது என்றே கூறலாம். 'அழகின் சிரிப்பு' என்ற நூல் தலைப்பே இதற்கு நல்ல சான்று. அழகு சிரிப்பதாக உணர்ந்தார் பாரதிதாசன். இவ்வுணர்ச்சி இயல்பான தென்பதை அவருடைய பிற நூல்களில் வரும் சில குறிப்புக்கள் உணரத் துணை செய்யும் 'இளைஞர் இலக்கியம்' என்ற அவர் நூலில்

"அழும் உலகை உவகையிற்சேர்ப்பது
அழகு சிரித்ததை ஒப்பது" (25)

"எண்ணாயிரம் மரங்கள் இருக்கும்
அந்த இலை பளபளவென்று சிரிக்கும் (26)

"அழகிய நிலவு வந்தாலென்ன
அதுதான் கண்டு சிரித்தாலென்ன (27)

என வரும் சில குறிப்புக்கள் இதை உறுதிப்படுத்தும்.

அணுகுந் தன்மை — வாழ்க்கை

இவ்வாறு இயற்கையான உள்ளெழுச்சி, கூர்ந்தநோக்கு உணர்ச்சி கலந்த கற்பனை வழிச்செல்லும் கவிஞரின் கவிதை நெறியில், வாழ்க்கை பற்றிய அவருடைய தத்துவங்கள் கலப்புறுகின்றன. அவருடைய தத்துவங்கள் உயர் நோக்கமாயினும் எங்கும் அழகு எதிலும் அழகு என வேக உணர்ச்சி சில சமயங்களில் கலை வடிவத்தில் சில பொருந்தாமைகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

தன் கவிதை ஆற்றலை ஒரு நோக்கத்திற்காக — வாழ்க்கை நோக்கத்திற்காகப் பயன்படுத்துகின்றார் கவிஞர். இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் நூல் முன்னுரையில் கவிஞர் கூறும் சில கருத்துக்களைப் பார்க்கவேண்டும். அவை

1. இயற்கை அனைத்தும் அழகே, அந்த அழகு செந்தாமரை என்றும், நிலவென்றும். கதிரென்றும் சிரித்தது

25, 26, 27, — இளைஞர் இலக்கியம், பாரதிதாசன்.

2. காணும் பொருளிலெல்லாம் அழகைக்காணவும், கண்டவாறு தாமேயாகச் சொல்லோவியம் செய்யவும் திறம் பெறுதல் வேண்டும். தமிழர்கள்

3. பிறமொழி, தமிழ்மொழி நூற்களில் பார்த்தபடி எழுதும் நிலை தீரவேண்டும் அதற்கு இச்சிறு நூல் இயற்றியதின் வாயிலாக நான் இதை அறிஞர்க்கு நினைவுறுத்துகின்றேன். 28

இக்கருத்துக்களிலிருந்து கவிஞரின் இயல்பான இயற்கை ஈடுபாட்டையும், நோக்கத்தையும் புரிந்து கொள்ளலாம். இவ் வாழ்க்கை நோக்கம், அழகுத் தத்துவத்தோடு கலக்கும் தன்மையை இனிக் காணலாம்

ஆறுபற்றிப் பாடும்போது

" கோடையாட்சி
மாற்றிற்றுப் புரட்சி வெள்ளம்" என்றும் (29)

" நோய்தீர்ந்தார் வறுமை தீர்ந்தார்
நூற்றுக்கு நூறுபேறும்
ஓய்வின்றிக் கலப்பை தூக்கி
உழவுப் பண்பாடலானார்
சேய்களின் மகிழ்ச்சி கண்டு
சிலம்படி குலுங்க ஆற்றுத்
தாய் நடக்கின்றாள் வையம்
தழைகவென்றே" என்றும் பாடுகிறார். (30)

இங்கே ஆற்றைத் தாயாகக் காணும் மரபுத் தன்மையையும் காணலாம். ஆனால் வெள்ளத்தைப் புரட்சியாக்கி வறுமை தீர்ந்ததையும் கலை வடிவஞ் சிதறாமல் கூறியுள்ளார். வான் பற்றிய பாடலில்,

" மண்மீதில் உழைப்பாரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம்" என்றும் (31)

28, முன்னுரை, 'அழகின் சிரிப்பு'
29. ஆறு — பா. 4
30. ஆறு — பா. 10
31. வான் — பா. 3

புருக்கள் பற்றிய பாடலில்,

"வட்டமாய் புருக்கள் கூடி
இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்துமில்லை
வேறுவே றிருந்தருந்தும்
கட்டில்லை, கீழமேல் என்னும்
கண்மூடி வழக்கமில்லை" என்றும் (32)

இச் சிதரு நிலையினைக் காண முடியும்.

ஆனால் தென்றல் பற்றிப் பாடும்போது இத்தன்மையில் லுள்ள சிதறல் நிலையைக் காணலாம்,

"தின் குன்றைத் தூள் தூளாகச்
செய்யினும் செய்வாய். நீஓர்
நுண்துளி அனிச்சம் பூவும்
நோகாது நுழைந்தும் செல்வாய்
உன்னிடம் அமைந்திருக்கும்
உண்மையின் விரிவில் மக்கள்
சின்னதோர் பகுதியேனும்
தெரிந்தர்ர்கள் இல்லை, யேனும்
தென்னாடு பெற்ற செல்வத்
தென்றலே உன் இன்பத்தைத்
தென்னாட்டுக் கல்லால் வேறே
எந்நாட்டில் தெரியச் செய்தாய்." (33)

கவிஞரின் தாய் நாட்டுப் பற்றின் வேகத்தன்மை. தென்னாட் டார் மட்டுமே மக்கள் என்ற உணர்ச்சி எனும் கருத்து இவ் விடத்தில் பொருந்தாமல் இருக்கிறது. காரணம் இனப்பற்றின் தெளிவுபோல அதை அழகுடன் இணைத்துப் பாடும் நவிற்சி முறை (Interpretation) வலிந்து அமைந்து இருத்தலாலேயாம். ஆனால் ஆரிய எதிர்ப்புக் கொள்கை காடு — பற்றிய பாடலில் நன்ருகப் பொருந்துகிறது. இதுபோலவே 'கிளி' பற்றிய பாடலில் கூறுகிருர்

"தினைக் கொல்லைக் குறவன் உன்னைச்
சிறை கொண்டு நாட்டில் வந்து
மனைதோறும் சென்றே உன்றன்

52. புருக்கள் — பா. 3 33. தென்றல் — பா. 1 & 2

அழகினை எதிரில் வைப்பான்
தனக்கான பொருளைச் செல்வர்
தமிழ்க்கீதல் போல ஈவார்'' (34)

என்னும்போது தமிழ் அடிப்படையில் செல்வரைப் பாராட்டு கிருர். வறுமை அடிப்படையில் செல்வரைத் திட்டும் கவிஞர் இவ்வாறு பாராட்டுகிருர். கூடவே இப்போது ஓர் எண்ணம் வருகிறது. உழைப்பவர் உரிமையை மதிக்காமல் ஆனல் தமிழ் வாழ்க என்று சொல்லும் செல்வரை எப்படி வைத்துக் கூறுவது?

இவை போலவே முன்னர்க் காட்டிய புருக்களின் தவருன ஒழுக்கம், கிளியின் அடிமை நிலையைக் காணல் ஆகியவை '' நவிற்சி '' (Interpretation) பெறும்போது ஒரு வகையான செயற்கைத்தன்மை பெற்று வருவதைக் காணலாம்.

பாரதிதாசன் சமுதாயப் பார்வை பற்றி நன்கு தெரியும் இவ் அடிப்படையிலான அவர் கொள்கையையும மீறிப் பரந்த மனித நோக்கும் காணக்கிடக்கின்றன அவர் பாடல்களில். ஆனல் யாவும் கலந்து, அழகு நவிற்சியோடும் கலக்கும்போது இயற்கைத் தன்மையைப் போலவே செயற்கைத் தன்மையும் பெற்று விடுகின்றன.

'' இருளினை வறுமை நோயை
இடறுவேன், என்னுடல்மேல்
உருளகின்ற பகைக் குன்றைநான்
ஒருவனே உதைப்பேன், நீயோ
கருமான் செய்படையின் வீடு
நான் அங்கோர் மறவன் கன்னற்
பொருள் தருந்தமிழே நீ ஓர்
பூக்காடு நானோர் தும்பி '' (35)

என்று இறுதியாகக் கூறுகிருர். அழகென்பாள் தந்த கவிதை இவ்வாறு கொள்கை நோக்கிற்காக உருவெடுத்து நிற்கிறது. பட்டணம், சிற்றூர் பற்றிய பாடல்களில் அவருடைய சமுதாயப் பார்வையை நன்கு புரிந்து கொள்ளலாம். சிற்றூரில் வறுமை, அறியாமையைச் சித்தரித்திருக்கும் பாங்கே அவருடைய மனித நேயத்தை (Humanism) நன்கு காட்டும். ஆனலும் இனப்பற்றின் மேலோங்கல் நவிற்சியின் குறைபாடுகளுக்குக்

34. கிளி — பா. 9. 35. தமிழ் — பா. 10

காரணமாக அமைகின்றது. வறுமை ஒழிப்பு புரட்சி போன்றன பற்றியும் சிந்திப்பதால் — அதுவும் உணர்ச்சிவீச்சுக்களாகவே அமைந்திருக்கும் நிலை — அவருடைய தத்துவத்தில் தத்துவத் தெளிவின்மையையும் தோற்றளித்துள்ளது. இந் நிலையே நவிற்சியிலுள்ள சில குறைபாடுகளுக்கு அடிப்படை எனலாம் இக்குறைபாடுகள் மிகச் சிலவே. இவை முழுதுமான நூல் நோக்கத்தை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. அழகைத் தாமே கண்டவாறு சொல்லோவியம் செய்வதும் அத்திறத்தை வளர்ப்பதும் தானே நூல் நோக்கம்.

முடிவுரை

"இயற்கை தன் நயத்திற்குக் கவிஞனை இழுக்கிறது. இதுவே அவனுடைய உள்ளெழுச்சி. கவிஞனோ இயற்கையை தன் போக்கில் அமைக்கிறான், இதுவே அவன் கலை" (36) என்று ஒரு திறனாய்வாளர் கூறுவதுபோல இயற்கையிடம் பெற்ற உள்ளெழுச்சியும் (Inspiration) அடுத்த நிலையில் வளர்ந்த கூர்ந்த நோக்கும் (observation) உணர்ச்சிக் கலப்பும், பின் விரிந்த கற்பனைகளும் (Imagination) கவிதைத் தத்துவத்திற்குத் தளம் அமைக்க, கவிஞரின் காலம் சமுதாயம் ஏற்படுத்திய சில நோக்கங்களும் கலந்து, அவருடைய உணர்ச்சி நிலைகளுக்கேற்ப கவிதையை இழுத்துச் செல்கிறது. இது, அழகைச் சுவைக்கும் தன்மை கடந்து, சில நீதி மதிப்புக்களையும் கண்டு, பின் இனநோக்கிலேயே கூடல் கொள்கிறது. இப்பாங்கில் அமைந்திருப்பதைக் காண்போமாயின், பாரதிதாசனின் கவிதைத தத்துவத்திலுள்ள இயற்கைத் தன்மைகளையும். செயற்கைத் தன்மைகளையும் இனங்கண்டு கொள்ளலாம்.

பயனுன நூல்கள்

1. அழகின் சிரிப்பு — பாரதிதாசன், செந்தமிழ் நிலைய வெளியீடு, இராமச்சந்திரபுரம், 1968, 9ம் பதிப்பு,

2. இளைஞர் இலக்கியம் — பாரதிதாசன்

3 Wordsworth's theory of Poetry—James A. W. Hefferman Cambridge University Press 1969.

---

36. Carleton Noyes. Poetry — General Introduction Lectures on Hard Ward Classics.

திருமுறைச் சிறப்பு

பாவலரேறு. ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

இறை வணக்கம்

பொன்காட்டும் பனிமலைவிட் டிறங்கித் தென்னர்
புகழ்காட்டும் தமிழின்பால் காதல் பூண்டு
நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக் கருளிக் காத்த
மின்காட்டும் கொடிமருங்குல் உமையாள் கேள்வன்
விருப்பத்தால் திருப்புத்தூர் மேவி என்றும்
இன்பூட்டத் திருத்தளியான் எனவிங் கோங்கும்
இறையவனின் இணையடிகள் ஏத்து கப்பாம்.

திருமுறை ஆசிரியர்கள் வணக்கம்

சிவஞானத் தமிழ்க்கன்றே! தித்திக்கும் நாவரசே!
திருநாவல்லூர்
கவிஞான சுந்தரனே! கண்ணுதலோன் பண்ணெழுதக்
கவிதை தந்த
தவஞான வாசகனே! தமிழுய்யத் திருவிசைப்பாத்தந்த மேலீர்!
பவமோய மந்திரமூ வாயிரமும் பகர்மூலப் பாட்டனுரே

பதியொன்றும் கதிகாட்டும் பதினேராம் திருமுறையாம்
பதிகச்செம்மை
நிதியருளும் நேயத்தீர்! நெக்குருக்கி நெஞ்சஇருள் நீக்கித்தூய
மதிவளர்க்கும் திருத்தொண்டர் மாண்புமுறை முறைநவிலும்
வான்கவிஞ!
துதிநிறைந்த தமிழ்த்தொடையல் சார்த்தியும்
தாள்பணிந்தேன் துணைசெய் வீரே

அடிகளார் வணக்கம்

அண்ண மலையார் அருள்கூர ஆதீனத்துத் தலைமையினைக்
கண்ணுயேற்றுத் திருத்தளியான் காதல் மேவ நாவரசின்

17—5—70-ல் திருப்புத்தூர் தமிழ்ச் சங்கத்திற் பாடப்பெற்ற தலைமையுரை.

பண்ணு லின்பப் பைந்தமிழ்நூல் பரவும் சைவத் தமிழ்ச் சங்கம்
உண்ணோ ரருளால் உருவாக்கி உய்யக் கொள்ளும் சிவஞானி.

சிவநெறிக்கண் தெரியாராற் சேர்ந்த மாசைத்
திகழ்ஞானத் திருப்பணியால் கழுவிச் சைவம்
புவிநெறிக்குள் புராதனமாம் புரட்சி சான்ற
புகழ்சேர்க்கும் அருள்நெறிஎன் றறிஞர் ஏத்தக்
கவிமொழியால் கற்கண்டுச் சொற்பெ ருக்கால்
கடலுலகைக் கடைத்தேற்றித் தமிழைக் காக்கும்
தவமுனிவர் தெய்வசிகா மணிஎம் ஆசான்
தண்ணளிசேர் தாளிணைகள் தலைமேல் வைப்பாம்

யாழிசைத் தமிழால் இன்ப ஞானமார் ஒளியைச் சேர்த்துத்
தாழிசை முறையால் தந்த சைவநன் மறைகள் காட்டும்
சூழிசைத் திறத்தை எல்லாம் தூயசெம் மொழியாற் காட்ட
ஏழிசை போலும் ஈங்கே எழுந்துள கவிஞர்க் கென்றன்

களிப்புறு வணக்கம். எம்மைக் காத்தருள் ஞானத்தந்தை
அளப்பரும் பொருளை ஆன்றோர் அணிபெற ஏழேழாக்கிக்
கிளத்தலின் உண்மை காட்டக் கேள்வியால் நிறைந்தஏழு
வளத்தகு கவிஞர் தம்மை வைத்துளார் போலும் ஈங்கே.

பிறப்பேழு பண்ணேழு கடல்தீ(வு) ஏழு
பேருலகம் ஏழுகவித் தளைகள் ஏழு
புறத்திணையும் அகத்திணையும் ஏழே யாவும்
புகலரிய திறலுடைய வாகு மன்றோ
மறைக்கொண்ணு மாண்பைஎலாம் மலர்ந்து காட்டும்
மாமறையாம் திருமுறையின் மாண்பு பற்றி
இறைக்கடியா ராம்கவிஞர் ஏழு பேர்இங்கு
இசைத்தார் என் றியம்புதற்குஓர் வாய்ப்பா மன்றோ

சிவபெருமான் மேனியெனச் செம்மை மேவித்
திருமுடியிற் கங்கையென உணர்வு தாங்கித்
தவமுனிவர் இருபானேழ் சான்றோர் செய்த
சைவநெறித் திருமுறையின் சால்பை எல்லாம்
நவிலுதற்கிவ் வரங்கத்தே வீற்றுள் ளார்கள்
நடுவாக எனைவைத்தார் நகை விளைக்கும்
கவிகள்சில வேண்டுமெனும் கருணை போலும்!
கழல்வணங்கிக் கடன்புரிவேன் அடியே னன்றே.

பொருள்நூலின் புத்துணர்ச்சி புரிவான் அந்நாள்
புகன்ற அகப்பொருள் நூலின் பொருளைக்காட்ட
மருள்தீர்ந்த ஏழெழுவர் வாய்த்தார் அந்த
மன்றத்தின் தலைமைஉருத் திரசன் மர்க்காம்
அருள்நூலின் புத்துணர்ச்சி அளிப்பான் தெய்வ
ஆன்றோர்தம் பெருநூலின் ஆக்கங் காட்ட
இருள்தீர்ந்த மொழிக்கவிஞர் எழுவர் இந்நாள்
எழுந்துள்ளார் தலைமைஎனக் கெவ்வா ருகும்?

பேசாமற் பொருளுரைத்தான் உருத்ரசன்மன்
பேசியும்அப் பொருளுணர்த்தும் பெற்றி யில்லேன்
வாசாக யிங்கரியம் அன்றி மற்றவ்
வாழ்மறைநூல் மொழியுளனு பவமொன் றில்லேன்
ஈசா என் றழைத்தவுடன் தருமிக்காக
இயற்றமிழ்ப்பா வரைந்தளித்த எந்தை தந்தை
ஆசாகச் சிந்தனையில் அமர்ந்து ஞான
அமிழ்தகவி வழங்கிடுவான ஆதலாலே

கருப்பத்தூர் வாராமே திருமுறையாற்
காத்தளிக்கும் கலைமாச்செல்வர்
விருப்பத்தூர்ந் தருள்பெறுமா றருஉருவாய்
உமையோடு வீற்றிருக்கும்
திருப்புத்தூர் திருத்தளியான் சேவடியைச்
செந்தமிழாற் சிந்தைசெய்து
கருப்புத்தூர் சாறுபுரை கவிமொழிய
முயல்கின்றேன் கடைக்கணிப்பீர்!

அருமறைகள் தேருமல் ஐயுற்றேங்க
ஆதிபரம் பொருளியல்பைப் பண்பை, நம்முன்
வருமுறையை வாயாரப் புகழியல்பை
வழிபாடு செய்முறையை வாழ்ந்து காட்டி
இருமுறையில் ஈசனருள் ஏயும் சால்பை
இசைத்தமிழால் இசைக்கின்ற பன்னி ரண்டு
திருமுறையை ஒருமுறையும் முற்றுங்கல்லாச்
சிறியவன்சொல் மழலைஎனச் செவி மடுப்பீர்!

மன்னுயிர்கள் ஈடேற வாய்மலர்ந்த
மாண்புமிகு தெய்வநறுந் தமிழை இங்கே
பன்னியவர் யாரவர்? எப் பாங்கினுலே
பகர்ந்தார்? யார் பணித்தவர்? யார் யாருக்காக

கன்னலின் சாறெனக் கவிதை கண்ணீரோடு
கருணையினுற் புகன்ருர்கள்? உலகச் சான்ருேர்
சொன்னவெலாம் சிறுதொடரில் சுருங்கச்சொல்லி
சொல்லாத உண்மையெலாம் துலங்கச்சொன்ருர்

ஓடும் செம்பொனும் ஒக்க நோக்கிஎந்
நாடும் நன்னெறி நண்ண வேபெரும்
வீடும் வேண்டிலா விரகராய் அன்பு
கூடும் வாயரன் கழல்கு றுகினுர்

எத்தனைக் கலைகள் உண்டிங் கத்தனைத் துறையுந் தேர்ந்தார்
எத்தனைச் சமயம் உண்டிங் கத்தனைச்சமயந் தேர்ந்தார்
எத்தனை உலகம் உண்டிங் கத்தனை உலகும் தேர்ந்தார்
எத்தனை இன்பதுன்பம் அத்துணை அறிந்த சான்ருேர்

மனத்தகத்து மாசிலராய் அழுக்கா றின்றி
மாயஞ்செய் பாசவினை மலத்தைப் போக்கி
இனித்தகத்தே உறையிறையைப் புறத்தே நாட்டி
எல்லோர்க்கும் தெளிவாகச் சுட்டிக் காட்டி
மனித்தபிறப் புறுபயனை மன்பதைக்கே
வாய்மலர்ந்த அருளாளர் அன்ருே? மன்றிற்
குனித்துநட மாடுமவன் குறிப்பு நோக்கிக்
கோடிப்பா கோடியென கோடி காட்டி

அளித்தார்கள் அம்பலத்தே ஆடுங்கூத்தன்
அருள்மொழியைத் திருவாயால் அசைத் திசைத்தார்
களித்தார்கள் இறையன்பிற் கலந்து நின்று
கரைந்தார்கள் தேவாரப் பண்ணிசைப்பா;
குளித்தார்கள் அருட்கடலில் குறையே இல்லாக்
கோட்பாட்டைப் பண்பாட்டை நன்பாட்டிற்குள்
தெளித்தார்கள் சிவம்பெருகித் தமிழ்த ழைக்கத்
திரிந்தார்கள் அவர் மொழியே திருமுறைகள்

பாமணக்கும், ஞானப்பால் மணக்கும், பாடப்
பண் மணக்கும், பார்க்கவிழி மணக்கும், சொல்லும்
நாமணக்கும் நாடியுறவாகி நிற்பின்
நலம் மணக்கும், புலம் மணக்கும், நவிலுந்தோறும்
தேமணக்கும், சிந்தை செயத் திறல் மணக்கும்,
தேறிநிற்க தெய்வச்செஞ் சீர்மணக்கும்,
தீமணக்கும் திருமேனிச் சிவனுர் பாதச்
செழுமலர்கூர் பெத்த முத்திச் சுவை மணக்கும்.

உள்ளுணர்வு சிவநெறிக்கண் வழிந்து பொங்கும்
உரிமைஎலாம் உயிர்வழியே கலந்து பொங்கும்
விள்ளரிய செந்தமிழ்ப்பா வேட்கை பொங்கும்
வேண்டாமை எனும்விருப்பம் மிகுநது பொங்கும்
அள்ளூறித் தித்திக்கும் அமிழ்தச் சொல்லால்
ஆன்மஉணர் வளவின்றிப் பொங்கிப் பாயும்
வெள்ளிமலேச் செஞ்சடையான் விளேயாட்டெல்லாம்
வெள்ளமெனப் பொங்கிஉடல் சிலிர்க்கும் எங்கும்.

தவமிருந்து பெற்றமக மழலே கைக்கும்
தனித்தனிமுக் கனிபிழிந்த சாறு வர்க்கும்
கவிஞெழுகு கற்புடைய காதல் நங்கை
கனியிதழும் மணிமொழியும் கசந்து போகும்
புவிமுழுதும் பெறினுமது புன்மை காட்டும்
புலனெல்லாம் சிந்தைவுருவாகி நிற்கும்
சிவம்பெருக்கும் திருமுறையை ஓர்கால் செப்பும்
செம்மையுறு திறலுடையார்க் கென்ருல் அந்த

அருள்நூல்கள் திறமுறைக்க என்னலாமோ ?
ஆனேயஞ்சிச் சென்றபடி யறியாருண்டோ
இருட்கடலில் கல்மிதந்தத தனலன்ரே
எலும்பைப்பெண் ணுக்கியதும் அதுவேயன்ரே
மருளுடைய கொடுமுதலே வாய்திறந்து
மதலேயினே தந்தந்தன்ரே நஞ்சு நீங்கிக்
குருவருளேத் தந்ததெது நீர் நெருப்பில்
குலேயாமல் வென்றதெது கோயில் தோறும்

குலவுமிறை வன்மையெலாம் உவகைக் கண்ணீர்
கொப்புளிக்கக் கூறுந் திருமுறைகளன்ரே ?
நிலவளிக்குந் தண்மையினே நெஞ்சில் தேக்கி
நெருப்பளிக்கும் வன்மையினே அறிவில் தேக்கி
நலமளிக்கும், நானிலத்தின் வாழ் வளிக்கும்.
நங்கையொரு கூறனிடை நண்ணச் செய்யும்
வலமளிக்கும் வளமளிக்கும் வாய்மணக்க
வழுத்துக! நம் திருமுறையை; அவையீர்! இங்கே

கன்னெஞ்சுங் கரைந்துருக்கும், களிப்பிற்கெல்லை
காட்டிநிற்கும், காற்றெனநம் உணர்வுதோறும்
பின்னிவிடும். நாம்பெற்ற பெரும் பேருகும்
பீடுதிரு முறைகள்; இவை பெற்றிருந்தும்
பொன்னெடுமண் விருப்பாலே புன்மையுற்றுப்
புகழ்தேடி இகழ்கொண்டு பொன்றலாமோ?
பன்னியசெந் தமிழ்மாலை அமிழ்திருக்கப்
பாலையிலே கழுநீர்க்குப் பறக்கலாமோ?

பத்திநெறிப் பரப்பைஎலாம் அகல் வானத்துப்
பருதியென ஒளிகாட்டி உயிர்வளர்க்கும்
சித்திதரு ஞானநெறிச் செழிப்பையெல்லாம்
செழுங்கடல்மேல் அலையெனவே செறித்துக்காட்டும்
அத்தனருள் பெறநான்கு நெறியும் கூறி
அனுபவிக்கும் நால் நெறியும் அழகாய்க் கூறும்
புத்திமிகு பதியியல்பும் பசு பாசத்தின்
போக்கினெடு தெளிவாகப் புரியவைக்கும்

ஆடல்வலான் ஐந்தொழிலின் அழகைக் காட்டும்
அம்மையப்பர் தத்துவத்தை அணியாற் கூறும்
பாடவல்லார் தமக்கருளும் பாங்கைக் காட்டும்
பணிபுரிவார் பெறும் திறத்தைப் பகர்ந்து நிற்கும்
நாடி நிற்பார் நவைதீரும் வழியுரைக்கும்
நாப்படைத்த பயனை எலாம் நல்கி நிற்கும்
தேடவல்லார் சிந்தைக்குள் உறைவோனை இத்
தேவாராம் தெருவில் வந்தருளச் செய்யும்

நாள்மீன்போல் மூவொன்பான் நாயன்மார்கள்
நவில் பதினெண்ணுயிரத்தை நல்லோர் சொல்லக்
கேள்விபெறல், கிளர்ந்துசொலல், கேட்கச்சொல்லல்,
கேண்மையினுற் சிந்தித்தல், வழிபாடமென்று
ஆள்வினையை ஆன்றோர்கள் அறைந்தவாறே
அடிபற்றிச் சென்றவரிப் படியைப் பற்றூர்

156 ஆம் பக்கம் பார்க்க

அறமும் ஆற்றலும்

திரு. த. பொ. தண்டபாணி.
ஓய்வு பெற்ற ஆசிரியர். பாண்டிச்சேரி.

சென்ற இதழின் தொடர்ச்சி.

குறுக்கிட்டு ஒரு கேள்வி பிறக்கலாம் என்னே? அறஞ் செய்வதற்கு முந்தி மனத்தின்கண் மாசற்றும், அகத்தான் முகன் அமர்ந்து நோக்கியும், நல்லவை நாடி இனிய சொல்ல வும் வேண்டுமோ? ஆமாயின் அவ்வாறு செய்ய எப்போதும் சாத்தியப் படுமோ? ஏற்போருள் எத்தகைய விகார மூர்த்திகள் இருக்கிறார்கள். கொள்ளையடிப்போரும், மருமக் கொலைஞர் களும், மண், பெண், பொன் திருடுவோர்களும், சோம்பேறி

155 ஆம் பக்கம் தொடர்ச்சி

கோள் சிறிதும் கொடுமை செயா செய்த பாவம்
கொடி நெருப்புள் பஞ்சாகும் என்பார் சான்றோர்

இறைஞானச் சுவையுணர்வே யன்றிப் பூக்கும்
ஏழிசை வாழ் திருமுறைகள் மன்பதைக்கு
முறை சான்ற திருமறைநூல் திருமுறைநூல்
முதிர்ந்தெழுந்த அரசியல்நூல் இலக்கியநூல்
நிறைவான தத்துவநூல் வாழ்வு நூலோடு
அறிவுநூ லாமென்னும் உண்மை காட்டத்
துறைதோறும் வல்ல எழுகவிஞர் ஈங்கே
துடிப்போடு வீற்றுள்ளார் பாயிரத்தை

இவ்வளவில் முன்னிறுத்தி இணையில்லாத
ஈராறு திருமுறையின் திறத்தைச்செப்ப
ஒவ்வொருவ ராகநுமுன் அழைப்பேன் பின்னர்
ஒன்றிரண்டு சொலநேர்ந்தால் சொல்வேன் இந்நாள்
தெவ்வர்களும் பணிந்தேத்தச் சிவத்தொண்டாற்றும்
செஞ்சொல் மாமுகில் ஞானத்தந்தை நம்முன்
செவ்விபெற அருள் புரியும் அடிகளார் தம்
திருவடியைப் போற்றி யினிமேலிசைப்பேன்

களும் இன்னபிறரும் ஏற்போர்களாக வருகின்றார்களே. அவர்களை எல்லாம் ஒரே நிலையில் நடத்துதல் தகுமா? முடியுமா? அனுபவத்திற்கெட்டாத சொல்லையும் செயலையும் வள்ளுவர் கூறினாலும் எப்படி அதனதன்படி நடக்க முடியும்? இன்னபிற வினாக்களும் எழலாம். அவை எல்லாம் ஆராய்ந்து பார்க்கும் போது ஒளியிற்பட்ட தூசாகும் என்க. எப்படி?

தருமத்தில் ஊன்றிய மனம் உடையவர்கள் நல்லதைத் தவிர மற்றவற்றைச் செய்வார்களோ? தருமஞ் செய்வதையே தங்கள் தங்கள் பேரின்பப் பெருவாழ்வாகக் கருதி வருகின்றவர்கள் இன்சொல்லையும் முகங் குளிர நோக்கிப் புன்முறுவல் பூக்க நோக்குதலையும் மனத்தே மாசற்றிருப்பதையும் தவிர வேறு எவற்றையும் அணிந்து கொள்ளவே மாட்டார்கள். வேறு பிற செயல்களைஎல்லாம் புகழுடைச் செயல்கள் என்றோ புகழை உண்டாக்கும் திறமை படைத்தன என்றோ யாண்டும் கூறமாட்டார்கள் அவர்கள் தருமத்தினாலேயே இன்பம் கிடைக்கும் என்ற முடிவில் அசையாது நின்று வாழ்வார்கள். அதற்கிணங்கவே திருவள்ளுவனாரும்

"அறத்தான் வருவதே இன்பம் ;மற்றெல்லாம்
புறத்த புகழும் இல".

என்று கூறலாயினர்.

அவ்வாறு அறத்தின் இயல்பைத் தெளிந்து வாழுங்காலத்து முன்செய்த வல்வினை அல்லது நல்வினைக்கீடாகச் சோதனைகள் உண்டாகலாம். உலகில் நம்மைச் சூழ்ந்த மக்கள் நம்மை அடைந்து நம்மால் நவிலப்படும் அற வாழ்வில் நிற்க முயலுங் காலத்து அவர்களுக்கு இடையூறு அவரவர்கள் ஈட்டிய வன்மத்தால் ஏற்படின் அவற்றை எல்லாம் மறைத்து வாழ ஒப்புவர். உதாரணமாக வைகுண்ட ஏகாதசிக்கோ அல்லது சிவராத்திரிக்கோ குளித்துப் பூசை செய்ய முயன்ற ஒருவனுக்கு உடம்பு அசௌக்கியத்தால் குளிக்க முடியாமை தோன்றும், அவன் 'நான் இன்று குளிக்கவில்லை' என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடம் சொல்லிக் கொள்ள மாட்டான். அதற்கு மாறாக, "நான் காவிரில் குளித்தேன் : நான் வெந்நீர் போட்டுக் கொண்டேன்" என்றெல்லாம் பிதற்றிக் கொள்வான் ; அவனது மனைவியோ, மக்களோ அதை அம்பலப் படுத்தும்போது அவர்களை நையப்புடைப்பான். இது பெரும்பாலும் உலக இயல்பாகி விட்டது. இவ்வாறு கரந்து ஒழுகுவான் ஒருவன் கோயில் பூசகனாக இருப்பானேல் அவனை யாரும் அகற்றவே முற்படு

வார். அல்லது அரசனுக இருப்பினும் அவனையும் நீக்கி முடியாட்சி வேண்டாம் குடியாட்சியே போதும் என்பர் எனவே தருமந் தலைகாப்பானை யாவனுயினும் மக்கள் விரும்புவர். வணங்குவர் தருமத்தைக் கெடுப்பவர்களை வெறுப்பர் இதனையே சிறு மாறுதலுடன் விநாயக புராணத்தில் அடியிற் கண்டவாறு கூறியிருப்பதை நோக்குவோமாக :-

"அறவோர் புரோகிதரை விடுத்திட்டிவரால் இந்த அரசன்தான்
அறவோன் அல்லன் இவன்போக்கி யறனேடுரிமை உடையானை
உறவே வைத்தற் கெண்ணினம் ஈதுஒத்தது எவர்க்கு
நின் கருத்தென்
உறவோதெனச் சூளுறவோடும் ஓர்ந்தே ஒருவன்தனைத்
தெளிக'

பொருள் இன்பம் இவற்ருல் ஓர் மன்னன் தன் மனைவியையும் மக்களையும் அதாவது தன் மனைவியை இன்பத்தாலும் தன் மக்களைப் பொருளாலும் சோதிக்கலாம் என்றும் அறத்தின் திறங்கொண்டு அறவோர் எனப்படும் அந்தணர்களையும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்ருலும் தனது மந்திரிகளையும் சோதிக்கலாம் என்றும் காளிகாபுராணம் கூறுகிறது. இருப்பினும் அவ்வரசனே பொருளைப் பெற்றுய்யும் வழிகளில் பேராசை கொண்டு தன்னைத்த இதர மன்னர்களையோ, இதர மக்களையோ, அல்லது உறவின் முறையார்களையோ துன்புறுத்துவதில் மகிழ்வானேல். அவனைத் திருத்த வேண்டியது மக்கள் பொறுப்பே. அப்பொறுப்பை மக்களே நேரிற் சென்று சொல்ல அஞ்சுவர் அதற்காக அரசனின் சேனதிபதியையேனும் அவர் ஒத்த மேலதிகாரியையேனும் அணுகித் தங்கள் குறைகளை அவர்கள் மூலம் அரசனுக்கு அறிவுறுத்துவார்கள். அக்கருத்தினையே விநாயக புராணத்தில் பின் வருமாறு கூறுகிருர். "சேனைத் தலைவனெடுமவனைச் சேர்ந்தாரையும் விட்டிவ்வரசன், ஈனப் பொருளாசையன் இவனை இழுக்கிக் கொடையோடுரிமையுமையுடை யானைப் புரத்தற்கெண்ணினம் ஈதமைந்த தெவர்க்கு நின் கருத்தென் ஊனப்படாமை உரைத்தியெனச் சூளோடுரைப்பித்தே தெளிக," இங்ஙனம் கூறியுந் திருந்தாத மன்னர்கள் இருப்பரேல் அவர்கள் பாரில் பொது மக்களின் ஆதரவினைப் பெறவே மாட்டர்கள்.

இன்ப நுகர்வில், பெரும் போகத்தில் தலை சிறந்தவன் மன்னனே. மன்னனுக்குற்ற சுகம் மா நிலத்தில் வேறு யாருக்குமே இருக்காதென்று கூடத் துணிந்து சொல்லலாம். அப்பெரிய சுகத்தை மன்னன் நல்ல வழியில் உரிமையும் மரபுந் தோய்ந்த முறையில் கற்பிற் சிறந்த தலைமகளோடு கூடி முயங்கிப்

பெறவேண்டும். அல்வழியில் அவனைச் செல்லவொட்டாது அவனது அரசாங்க அலுவல்கள் நிறைந்திருக்கும். இருந்தும் தன் மனைவியே, மாறுவேடத்தில் அல்லது சூள் நிறைந்த கருத்தில் அரசனை அணுகி வேறொரு தவசிரேட்டமும் கற்பும் நிறைந்த பெண்ணின் பெருமைகளைப் பேசி, அவளுக்கரசன் பால் அளவற்ற காதல் இருப்பதாகத் தெரிவித்து. அவளைச் சேர்ந்து இன்பார்ந்திருப்பதால் அரசனுக்கு ஏற்கனே உள்ள உரிமை, மரபு, ஆகியவற்றால் ஆகும் பெருமை ஓர்சிறிதுங் குன்றாதென்று எடுத்துரைத்து மன்னனின் திண்ணிய பெரு நெறியைக் கொண்ட அவனது மனோ நிலையைச் சோதிப்பதாம். அப்போது அவன் தன் தவமுது மூதாட்டியாகிய மனைவி கூறுஞ் சூளுரையை மெய்யென்று கருதி அவளால் கூறப்பட்ட மற்றோர் பெண்பால் இச்சை செலுத்த இசைவானேல் அம்மன்னனையும் உலகம் தூற்றும் என்பது ஒருதலை. இவ்வாறு இறைவனொத்த அரசனையும் சோதிக்கும் திறம் படைத்த மனைவிமார்கள் அந்தக் காலத்தும் இந்தக்காலத்தும் இருப்பது உண்மையே. இதைப் பற்றியும் விநாயகபுராணம் கூறுகிறது "உயிர்க் கொல்லி" யாக சதா மக்களையும் இதர தேசத்து மன்னர்களைம் வாட்டி வதைத்த வண்ணம் ஒரு மன்னன் இருப்பானேல் அவனைக் கண்ட உயிர்கள் யாராயிருந்தாலும் அஞ்சியேதீருவர். அவனைக் காணவும் அஞ்சுவரேல் அவனது நீண்ட ஆயுளுக்கு அவர் கள் உலைவைக்கவே தீர்மானிப்பர் ஒல்லும் வகையான் அம் மன்னனின் இறுதிச் சடங்கையும் ஈமச்சடங்கையும் காண விழைவர். இவ்விழைவிற்கு "உயிர் அச்சம்" என்று கூறு கிறார் வள்ளுவப் பெருந்தகை அதற்காக அமைச்சர்கள் ஓரிடத்துத் தனித்துக் கூடி சதியாலோசனையும் செய்வர். அச் சதியை நிறைவேற்ற வேண்டிய சூளுறவும் கபட நாடகமும் சிரமேற்கொள்வர். இதைக் குறிப்பால உணர்ந்து மன்னன் திருந்துவானேல் உலகம் செழிக்கும் இன்றேல் அம் மன்னனே மாய்வான். இக் கருத்தினையும் தெளிவாக விநாயக புராணம் கூறுகிறது.

ஆண்டிக்கும் உயிர் இருக்கிறது. அரசனுக்கும் உயிர் இருக்கிறது ஆனல் ஆண்டி தனது உடலில் உறையும் உயிர்க்கியல்பாய் உள்ள குணங்களிலும் தொழில்களிலும் சிறிது கட்டுப்படாது தடையின்றி ஈடுபடலாம். தனதுயிர்க் குணங் களான "துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல், உய்த்தல் ஆதி உடல் உயிர்த் தொழில் குணம்" — ஆயவற்றில் சிறிதும் குறைவின்றி நுகர்ந்து செல்லலாம் ஆனல் அரசன் அவ்வாறு செய்வதற்கில்லை. அவன் தனது கருவி கரணதிகளை

அடக்கி ஆளவல்லவன். தனதுயிர்க் குணங்கள் எத்தனையோ இருந்தும் அவற்றை ஒடுக்கித் தனது மனைவிக்குகந்த வாறும், மக்கள் அமைச்சர் ஆய பலருக் கேற்றவாறும் நடந்துகொள்ளலே அவனது மாண்பாம்.

இதுகாறும் அடியேன் கூறிவந்த கருத்துக்களை எல்லாம் திரட்டி வள்ளுவனார் பின்வரும் அடிகளில் தரலாயினர்.

"அறம்பொருள் இன்பம் உயிர் அச்சம் நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும்" — என்பதே அக்குறள்.

உலகில் மக்கள் பல வகையினர். பலவித இச்சை நிறைந்தவர்கள் அறத்தைப் பற்றிப் போற்றுவார்கள் தெய்வத்தைப் புறங் கூறுதல் நாத்திகக் கூட்டத்திற்கே தலை சிறந்த பண்பு என்க. இதனை வள்ளுவர் நன்ருக வன்மையாகக் கண்டிக்கிருர். புறங் கூறுதல் வேறுஎப்பொருட்கு இருந்தாலும் இருக்கட்டும் தருமத்தைப் பற்றியதாயின் அறவே இருக்கக்கூடாது என்கிருர். அறங் கூருன் புறங்கூருன் என இரு பெருமனிதர்களை நம் முன் நிறுத்துகின்ருர். அறங் கூருன் என்ருல் நாத்திகனைக் குறிக்கும். நாத்திகன் கொடியனவே செய்வான் அத் தீய செயல்கள் நாத்திகர்கள் கூட்டத்திற்கே பெருவிருந்தாக அமையும் எனவே உலகில் நாத்திகர்கள் செய்யும் தீய செயல்களை வரவேற்கும் ஓர் கூட்டத்தினர் உண்டென்க. ஆனுல் நாத்திகம் இழைக்கும் தீங்கை விட புறங் கூறுவோனின் புன்மொழிகள் அதிக அளவில பெருந் தீங்கை இழைக்கின்றன எனவே புறங் கூருதிருந்தால் அது நாத்திகனை விட மேலானவனுக்கும் புறங் கூறின் அதை விடக் கொடிய செயல் இல்லைஎன்ற பொருள் படப் பின்வரும் குறளை அமைத்துள்ளார்கள்.

"அறங்கூருன் அல்ல செயினும் ஒருவன்
புறங் கூருன் எனறல இனிது".

இத்துடன் விட்டாரில்லை. தருமத்தையே கெடுக்கக் கூடிய கொடிய செயலையும் செய்யலாம். அத்தகைய சீர்திருத்தம் வேண்டற்பாலதாயின் செய்யலாம். தற்காத்லதில கோயில் வழிபாட்டில், திருமணத்தில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் தருமத்தையே சீரழிக்கின்றன இருப்பினும் பொதுமக்கள் பலர் அத்தகைய மாறுதல்களை விருப்புகின றனர் ஆதலின் தருமத்தைக் கெடுத்தாலும் சட்டத்தில் ஆதரவு கிடைக்கிறது. ஆனுல் புறம் பழித்துக் காணுத இடத்தில தாழ்த்திக் கூறி நகைத்தல் மிக மிக மோசம் என்று திருவள்ளுவனுர் கூறுகிருர்.

— தொடரும்